அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 387/2012

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 18–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பி.சா.1 18.11.2025

பெயர் ராஜ்விக்னேஸ் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>குறுக்கு விசாரணை</u>:–

1. நான் வழக்கறிஞர் தொழில் செய்துவிருகிறனே். வேறு தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. நான வேறு தொழில் செய்யவில்லை என்பதை காட்டுவதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. தாவா சொத்தில் எவ்வாறு உரிமை கோருகிறேன் என்றால் அம்மா எனக்கு 1985 ல் செட்டில்மென்ட் எழுதிவைத்தார் . எனது அம்மாவிற்கு தாவா சொத்து கிரையம் மூலம் கிடைத்தது. அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். சொத்துவிவரம் என்னவென்றால் திருவள்ளூர் மாவட்டத்தில் சர்வே எண் 463/8 A வில் 33 சென்ட்.

2. 1985 வருடத்தில் எனக்கு 7 வயது இருக்கும் . எனக்கு செட்டில்மென்ட்

கொடுத்தபிறகு தாவா சொத்தை எனது தந்தை பராமரித்து வந்தார். சொத்துபற்றிய விவரத்தை யார் என்னிடம் சொன்னது என்றால் நான் அதேஊரில் இருப்பதால் மேஜர் ஆன உடன் சொத்துவிவரம் பற்றி பார்த்து தெரிந்துகொண்டேன். நான் எப்போது 18 வயது அடைந்தேன் என்றால் 1995 வருடத்தில். 1995 வருடத்தில் நான் சொத்தை சென்று பார்த்தேன் என்றால் அங்குதான் விவசாயம் செய்துவருகிறோம்.

3. தாவா சொத்தின் கிழக்கில் பாலன் நிலம், மேற்கில் முனியன் நிலம், வடக்கில் முருகையா நாடார் நிலம், தெற்கே காலிநிலம் உள்ளது. தற்போது நான்கு பக்கமும் வீடுவந்துவிட்டது என்றால் சரிதான். கிழக்கில் மட்டும் விவசாயம் நிலமாக உள்ளது. தாவா சொத்தின் அருகில் சுமார் 50 வீடுகள் இருக்கும். மேற்கூறிய 50 வீடுகள் எந்த சர்வே எண்களில் வரும் என்றால் அனைத்தும் வேறுவேறு சர்வே எண்கள் நிலம். அனைத்து வீடுகளும் ஒரே சர்வே எண்ணில் வெவ்வேறு உட்பிரிவில் வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தை சுற்றி சுமார் 7 அல்லது 8 வேறு வேறு சர்வே எண்கள் உள்ளது. அது ப்ரியா நகர் லேயவுட் அடியில் வரும். அந்த லேயவுட் எந்த வருடத்தில் ஏற்பட்டது என்றால் தெரியாது. ப்ரியா நகர் லேயவுட் 1987 வருடத்தில் போடப்பட்டது என்றால் தெரியாது.

4. அந்த லேயவுட்டை யார் தயார் செய்தது என்றால் பக்கத்து ஊரை சேர்ந்த ராமதாஸ் என்பவர் தயார்செய்தார். மேற்கூறிய ராமதாஸ் என்பருடன் எனக்கு உறவுமுறை உள்ளதா என்றால் இல்லை. ராமதாஸ் என்னதொழில் செய்கிறார் என்றால் தெரியாது. ராமதாஸ் எவ்வாறு மேற்கூறிய நிலம் லேயவுட் தயார்செய்தார் என்று விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1987 வருடத்தில் ராமதாஸ், முனிநாதன் என்பவரிடம் இருந்து பவர் பெற்று லேயவுட் தயார்செய்தார் என்றால் இருக்கலாம். தாவா சொத்தை தவிர வேறு சொத்துகள் எனக்கு அங்கு உள்ளதா என்றால்

சர்வே எண் 463/7 மற்றும் 463/9 எனது அப்பாவிற்கு சொந்தமான நிலம் ஆகும்.

5. மேற்கூறிய சொத்துகளை விற்பனை செய்துவிட்டோம். எப்போது விற்பனை செய்யப்பட்டது என்று ஞாபகம் இல்லை. மேற்கூறிய விற்பனை சம்மந்தமான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கு அது அவசியம் இல்லை. அவசியம் ஏற்பட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வேன். சர்வே எண் 463/7 மற்றும் 463/9 சொத்துகளை எனது அப்பா மேற்கூறிய ராமதாஸ் என்பவருக்கு விற்பனை செய்தார். எந்தவருடம் விற்பனை என்று தெரியவில்லை. வழக்கிற்கு முன்பு நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் சொத்தில் அத்துமீறல் சம்மந்தமாக புகார் கொடுத்துள்ளேன்.

6. 2012 வருடத்தில் நான் புகார்கொடுத்தபோது சொத்து எவ்வாறு இருந்தது என்றால் காலியிடத்தில் ஒரு செட் போடப்பட்டு இருந்தது. அந்த செட் யார் போட்டது என்றால் நான் தான் போட்டேன். தற்போதும் அந்த செட் சொத்தில் உள்ளதா என்றால் உள்ளது. அதற்கான புகைப்படங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என்பெயரில் செட்டில்மென்ட் எழுதிய விவரத்தை என்னிடம் எனது தந்தை சொன்னார். செட்டில்மென்ட் ஆவணத்தில் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். அசல் ஆவணத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் அசல் ஆவணம் தொலைந்துவிட்டது அதுசம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்து untraceable certificate பெற்று தாக்கல் செய்துள்ளோம். எவ்வாறு தொலைந்தது என்றால் கிராமநிர்வாக அலுவலகத்தில் பட்டாமாற்றம் செய்வதற்காக ஆவணத்தை

கொடுக்கும்போது 2012 ல் தொலைந்துவிட்டது.

7. 2012 வருடத்திற்கு முன்பு நான் சொத்து சம்மந்தமாக வில்லங்கம் போட்டுபார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அப்போது வேறு பதிவுகள் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. பி.சா.ஆ 11 வில்லங்கம்சான்றிதழில் 1960 முதல் 1986 வரை மற்றும் 1987 முதல் 1993 வரை மற்றும் 1993 முதல் 2012 வரை வில்லங்கம் பதிவு எடுக்கப்பட்டது. 1960 முதல் 1986 வரை வில்லங்கம் மேனுவல் ஈசி என்றால் சரிதான். 1987 லேயவுட் போட்டபிறகு வழக்கு சொத்தில் வேறு 2 வில்லங்க பதிவுகள் உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வில்லங்கசான்றிதழில் அவ்வாறு எதுவும் இல்லை.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)